# முக்கிய தகவல்கள் ஆவணம்

## (நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்புத் திட்டங்கள்)




LB FINANCE

## முக்கிய தகவல்கள் ஆவணம் - பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும் மேலதிக தகவல்களும்

எல்.பீ. ∴பினான்ஸிலுள்ள நாம் வழங்கும் வசதிகள் மற்றும் சேவைகள் பற்றி விசாரிப்பதற்கு நீங்கள் பின்வரும் வழிகளைப் பயன்படுத்தலாம்.

தொலைபேசி: +94 112 200 200

மின்னஞ்சல்: info@lbfinance.lk

வலைத்தளம்: https://www.lbfinance.com/

முகவரி: தலைமை அலுவலகம், இல.275/75, பேராசிரியா ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07, இலங்கை.
நிறுவன அலுவலகம், இல.20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03, இலங்கை.

சகல வார நாட்களிலும் சனிக்கிழமைகளிலும் மு.ப. 8.30க்கும் பி.ப. 6.00க்கும் இடையே நீங்கள் எந்தவொரு எல்.பீ. ∴பினான்ஸ் கிளைக்கும் விஜயம் செய்யலாம்.

உங்களுக்கு மிகவும் அருகிலுள்ள கிளை எதுவுவென அறிய, கீழுள்ள பட்டியலைப் பார்க்கவும்.
https://www.lbfinance.com/branch-network

மேலதிக தகவல்கள் மற்றும் விசாரணைகளுக்கு எமது சமூக ஊடகச் சனல்களில் பிரவேசியுங்கள்.

| | |
|---|---|
| Facebook | : https://www.facebook.com/LBFinancePLC/ |
| Instagram | : https://www.instagram.com/lbfinanceplc/ |
| YouTube | : https://www.youtube.com/lbfinance |
| LinkedIn | : https://lk.linkedin.com/company/lb-finance-plc/ |
| Twitter | : https://twitter.com/LBFinancePLC/ |

## முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை

வாடிக்கையாளர்கள் பின்வரும் வழிகளில் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம்:

- கிளை முகாமையாளரின் ஊடாக
- அழைப்பு நிலையத்தின் ஊடாக (0112 200 200)
- மின்னஞ்சல் மூலம்:: rashmikac@lbfinance.lk
- கடித மூலம்: வாடிக்கையாளர் உறவு அலுவலர், எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி., இல.165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.

திருப்திகரமான தீர்வு ஒன்றினை நிறுவனம் வழங்காவிட்டால், வாடிக்கையாளர் தனது முறைப்பாட்டை இலங்கை நிதி ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்திற்குக் கொண்டு செல்லலாம்.

நிதி ஆலாட்சி அதிகாரி
நிதி ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம்
143ஏ, வஜிரா வீதி, கொழும்பு 05.

தொலைபேசி இலக்கம்: +94 11 259 5624

தொலைபேசி/தொலைநகல் இலக்கம்: +94 11 259 5625

மின்னஞ்சல்: fosril@sltnet.lk

வலைத்தளம்: www.financialombudsman.lk

## 1. முக்கிய தகவல்கள் ஆவணம் - நிலையான வைப்புகள்

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - 1 மாதம் முதல் 60 மாதங்கள் வரையான காலப்பகுதியின் அடிப்படையில் வட்டி வீதங்கள் தீர்மானிக்கப்படும்.<br>- வாடிக்கையாளரின் தெரிவுக்கேற்ப, முதிர்ச்சியில் அல்லது மாதாந்தம் வட்டி வழங்கப்படும்.<br>- நிலையான வைப்புப் பெறுமதியில் 80% வரை (மாதாந்தம் செலுத்தப்படும் வட்டியெனின்) அல்லது 85% வரை (முதிர்ச்சியில் செலுத்தப்படும் வட்டியெனின்) கடன் வசதியைப் பெற முடியும்.<br>- நிலையான வைப்புகளை ஆரம்பிக்கவும் மீளப்பெறவும் LB CIM வொலட் இடமளிக்கும். LB CIM வொலட் ஊடாக மேலதிக கடன்களையும் பெற முடியும். |
| தேவையான குறைந்தபட்ச மீதி | ரூ.5,000/- |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை |
| பேணுதல் கட்டணம் | பேணுதல் கட்டணம் இல்லை |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| கணக்கை ஆரம்பித்தல்/ மூடுதல் /வாடிக்கையாளர் மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - இலங்கையில் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். பாதுகாவலர் ஒருவரைக் கூட்டு வைப்பாளராகக் கொண்ட பராயமடையாதவர்களின் நிலையான வைப்புக் கணக்குகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>- வைப்பாளரின் வயது 18 வயதிற்குக் குறைவாக இருந்தால், அவர் பராயமடையும் வரை அப் பராயமடையாதவர் கணக்கிலிருந்து வைப்புப் பணத்தை மீளப்பெற முடியாது.<br>- வைப்பாளர் வெளிநாட்டில் வசித்தால், நிலையான வைப்பு தொடர்பாக ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மாற்றுவதற்கு அட்டோர்னித் தத்துவம் கட்டாயமானதாகும்.<br>- செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை (தே.அ.அ.) அல்லது கடவுச்சீட்டை (க.சீ.) வைத்திருக்காத இலங்கையர் இக் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- இலங்கையில் வதிவிட வீசாவைக் கொண்டிருக்காத வெளிநாட்டவர்கள் இக் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- பணம் முன்கூட்டியே மீளப் பெறப்படின், முகாமைத்துவத்தின் தற்றுணிப்பிற்கு அமைவாகவே வட்டி வழங்கப்படும். |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - கைவிடப்பட்ட நிலையான வைப்புகள் தொடர்பில் வழமையான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படும். (நியமிக்கப்பட்டவர்கள்/பயனாளிகள் தகுதி பெறுவார்கள்).<br>- ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு அமைய, கைவிடப்பட்ட நிலையான வைப்புகள் பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும். |

–

## 2. முக்கிய தகவல்கள் ஆவணம் - வழமையான சேமிப்புகள்

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - சேமிப்புக் கணக்குகளுக்கு, வைப்புத் தொகைக்கேற்ப வேறுபடும் வட்டி வீதங்கள் பிரயோகிக்கப்படும். வட்டியானது தினசரி மீதியின் அடிப்படையில் அமைந்திருக்கும்.<br>- நாளாந்தம் கணிக்கப்படும் வட்டி மாத முடிவில் மூலதனத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும்.<br>- VISA இயலுமை கொண்ட பற்று அட்டைகள் வழங்கப்படும்.<br>- பற்று அட்டை வைத்திருப்பவர்கள் POS கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியும்.<br>- உள்நாட்டில் Lanka Pay இயலுமை கொண்ட எந்தவொரு ATM இயந்திரத்தின் ஊடாகவும் சர்வதேச ரீதியாக VISA இயலுமை கொண்ட ATM இயந்திரங்களின் ஊடாகவும் மீளப்பெறுதல்களைச் செய்யலாம்.<br>- எந்த நேரத்திலும் கொடுக்கல் வாங்கல்களுக்கு இடமளிக்கும் LB e-connect வசதி இலவசமாக வழங்கப்படும்.<br>- உள்ளக நிலையான கட்டளைகள் மற்றும் நேரடிப் பற்று வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.<br>- SLIPS/ CEFTS பரிமாற்ற வசதிகள் கிடைக்கும்.<br>- டிஜிட்டல் சேமிப்புக் கணக்குகள் தொடர்பில் LB CIM வொலட் இயலுமை கொண்ட ஒன்லைன் கொடுக்கல் வாங்கல்கள். |
| தேவையான குறைந்தபட்ச மீதி | சேமிப்புக் கணக்கிற்கான குறைந்தபட்ச ஆரம்ப மீதி ரூ.500/-. CIM கணக்குகளை பூஜ்ஜிய மீதியுடன் ஆரம்பிக்க முடியும். |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை. |
| பேணுதல் கட்டணம் | - CEFTS மற்றும் SLIPS கட்டணங்கள்<br>- ATM மீளப்பெறுதல்களுக்கு கொடுக்கல் வாங்கல் கட்டணம் பிரயோகிக்கப்படும். |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| கணக்கை ஆரம்பித்தல்/ மூடுதல் / வாடிக்கையாளர் மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் (பராயமடையாதவர்கள்) வழமையான சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.<br>- செல்லுபடியாகும் தே.அ.அ/க.சீ வைத்திருக்காதவர்கள் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- இலங்கையில் வதிவிட வீசாவைக் கொண்டிருக்காதத வெளிநாட்டவர்கள் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- பணப் பரிமாற்றங்கள் மீது நிறுவனத்தினால் வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு அமைய இது நிர்ணயிக்கப்படலாம். |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - ஒரு வருடத்திற்கு மேல் கொடுக்கல் வாங்கல் செய்யப்படாத கணக்குகள் உறக்கக் கணக்குகளாக வகைப்படுத்தப்படும்.<br>- உறக்கக் கணக்கை மீண்டும் செயற்படுத்துவதற்கு, உறக்கக் கணக்கைச் செயற்படுத்தும் படிவம் ஒன்றை நிரப்புவதுடன் ஆளடையாளத்தையும் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். |

## 3. முக்கிய தகவல்கள் ஆவணம் -“லிட்டில் ஹீரோஸ்” (சிறுவர் சேமிப்புகள்)

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கு, வைப்புத் தொகைக்கேற்ப வேறுபடும் வட்டி வீதங்கள் பிரயோகிக்கப்படும். வட்டியானது தினசரி மீதியின் அடிப்படையில் அமைந்திருக்கும்.<br>- நாளாந்தம் கணிக்கப்படும் வட்டி மாத முடிவில் மூலதனத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும்.<br>- |
| தேவையான குறைந்தபட்ச மீதி | ரூ.500/- |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை |
| பேணுதல் கட்டணம் | பேணுதல் கட்டணம் இல்லை |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| கணக்கை ஆரம்பித்தல்/ மூடுதல் / வாடிக்கையாளர் மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் தனியாக சிறுவர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.<br>- பாதுகாவலர் ஒருவருடன் சேர்ந்து ஆரம்பிக்கப்படும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்ப:டும். .<br>- பராயமடையாத கணக்கு வைப்பாளர் பராயமடையும் வரை சிறுவர் சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெறுவது வரையறுக்கப்பட்டிருக்கும். |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - பராயமடையாத கணக்கு வைப்பாளர் பராயமடையும் வரை பணத்தை மீளப்பெறுவது வரையறுக்கப்பட்டிருந்தாலும், அந்த சிறுவர் சேமிப்புக் கணக்கு தொடர்ந்து செயலுள்ளதாக இருக்கும். |

–

# 4. முக்கிய தகவல்கள் ஆவணம் - சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்பு

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - சேமிப்புக் கணக்குகளுக்கு, வைப்புத் தொகைக்கேற்ப வேறுபடும் வட்டி வீதங்கள் பிரயோகிக்கப்படும். வட்டியானது தினசரி மீதியின் அடிப்படையில் அமைந்திருக்கும்.<br>- நாளாந்தம் கணிக்கப்படும் வட்டி மாத முடிவில் மூலதனத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும்.<br>- VISA இயலுமை கொண்ட பற்று அட்டைகள் வழங்கப்படும்.<br>- பற்று அட்டை வைத்திருப்பவர்கள் POS கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியும்.<br>- உள்நாட்டில் Lanka Pay இயலுமை கொண்ட எந்தவொரு ATM இயந்திரத்தின் ஊடாகவும் சர்வதேச ரீதியாக VISA இயலுமை கொண்ட ATM இயந்திரங்களின் ஊடாகவும் மீளப்பெறுதல்களைச் செய்யலாம்.<br>- எந்த நேரத்திலும் கொடுக்கல் வாங்கல்களுக்கு இடமளிக்கும் LB e-connect வசதி இலவசமாக வழங்கப்படும்.<br>- உள்ளக நிலையான கட்டளைகள் மற்றும் நேரடிப் பற்று வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.<br>- SLIPS/ CEFTS பரிமாற்ற வசதிகள் கிடைக்கும். |
| தேவையான குறைந்தபட்ச மீதி | ரூ.500/- |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை |
| பேணுதல் கட்டணம் | பேணுதல் கட்டணம் இல்லை |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| கணக்கை ஆரம்பித்தல்/ மூடுதல் / வாடிக்கையாளர் மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - 60 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.<br>- சிரேஷ்ட பிரஜை அல்லாத ஒருவருடன் சேர்ந்த கூட்டுக் கணக்குகளுக்கு வழமையான சேமிப்புக் கணக்குகளுக்குரிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும். |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - ஒரு வருடத்திற்கு மேல் கொடுக்கல் வாங்கல் செய்யப்படாத கணக்குகள் உறக்கக் கணக்குகளாக வகைப்படுத்தப்படும்.<br>- உறக்கக் கணக்கை மீண்டும் செயற்படுத்துவதற்கு, உறக்கக் கணக்கைச் செயற்படுத்தும் படிவம் ஒன்றை நிரப்புவதுடன் ஆளடையாளத்தையும் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். |

## 5. முக்கிய தகவல்கள் ஆவணம் - முதாரபாஹ் சேமிப்புகள்

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - கவர்ச்சியான இலாபப் பங்கு வழங்கப்படும்.<br>- VISA இயலுமை கொண்ட பற்று அட்டை வழங்கப்படும்.<br>- பற்று அட்டை வைத்திருப்பவர்கள் POS கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியும்.<br>- உள்நாட்டில் Lanka Pay இயலுமை கொண்ட எந்தவொரு ATM இயந்திரத்தின் ஊடாகவும் சர்வதேச ரீதியாக VISA இயலுமை கொண்ட ATM இயந்திரங்களின் ஊடாகவும் மீளப்பெறுதல்களைச் செய்யலாம்.<br>- எந்த நேரத்திலும் கொடுக்கல் வாங்கல்களுக்கு இடமளிக்கும் LB e-connect வசதி இலவசமாக வழங்கப்படும்.<br>- உள்ளக நிலையான கட்டளைகள் மற்றும் நேரடிப் பற்று வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.<br>- SLIPS/ CEFTS பரிமாற்ற வசதிகள் கிடைக்கும். |
| தேவையான குறைந்தபட்ச மீதி | ரூ.500/- |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை |
| பேணுதல் கட்டணம் | பேணுதல் கட்டணம் இல்லை |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| கணக்கை ஆரம்பித்தல்/ மூடுதல் / வாடிக்கையாளர் மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - செல்லுபடியாகும் தே.அ.அ/க.சீ வைத்திருக்காதவர்கள் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- இலங்கையில் வதிவிட வீசாவைக் கொண்டிருக்காத வெளிநாட்டவர்கள் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- பணப் பரிமாற்றங்கள் மீது நிறுவனத்தினால் வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு அமைய இது நிர்ணயிக்கப்படலாம். |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - ஒரு வருடத்திற்கு மேல் கொடுக்கல் வாங்கல் செய்யப்படாத முதாரபாஹ் சேமிப்புக் கணக்குகள் உறக்கக் கணக்குகளாக வகைப்படுத்தப்படும்.<br>- உறக்கக் கணக்கை மீண்டும் செயற்படுத்துவதற்கு, உறக்கக் கணக்கைச் செயற்படுத்தும் படிவம் ஒன்றை நிரப்புவதுடன் ஆளடையாளத்தையும் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். |

## 6. முக்கிய தகவல்கள் ஆவணம் - முதாரபாஹ் நிலையான முதலீடுகள்/ வகாலா கால முதலீடுகள்

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - கவர்ச்சியான இலாபப் பங்கு வழங்கப்படும்.<br>- முதாரபாஹ் முதலீடுகளிலிருந்து 80% வரை (இலாபப் பங்கு மாதாந்தம் வழங்கப்படின்) அல்லது 85% வரை (இலாபப் பங்கு முதிர்ச்சியில் வழங்கப்படின்) கடன் வசதியைப் பெற முடியும். |
| தேவையான குறைந்தபட்ச மீதி | ரூ.5000/- |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை |
| பேணுதல் கட்டணம் | பேணுதல் கட்டணம் இல்லை |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| கணக்கை ஆரம்பித்தல்/ மூடுதல் / வாடிக்கையாளர் மூலம் பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் (பராயமடையாதவர்கள்) முதாரபாஹ் நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும், பாதுகாவலர் ஒருவரைக் கூட்டு வைப்பாளராகக் கொண்ட பராயமடையாதவர்களின் முதலீட்டுக் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>- முதலீட்டாளரின் வயது 18 வயதிற்குக் குறைவாக இருந்தால், அவர் பராயமடையும் வரை அப் பராயமடையாதவர் கணக்கிலிருந்து வைப்புப் பணத்தை மீளப்பெற முடியாது.<br>- வெளிநாட்டில் வசிப்பவர்களின் முதலீடுகள் தொடர்பில் அட்டோர்னித் தத்துவம் அவசியம்.<br>- செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை (தே.அ.அ.) அல்லது கடவுச்சீட்டை (க.சீ.) வைத்திருக்காதவர்கள் இம் முதலீட்டைச் செய்ய முடியாது.<br>- இலங்கையில் வதிவிட வீசாவைக் கொண்டிருக்காத வெளிநாட்டவர்கள் இம் முதலீட்டைச் செய்ய முடியாது.<br>- பணம் முன்கூட்டியே மீளப் பெறப்படின், முகாமைத்துவத்தின் தற்றுணிப்பிற்கு அமைவாகவே இலாபப் பங்கு வழங்கப்படும். |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - கைவிடப்பட்ட முதலீடுகள் தொடர்பில் வழமையான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படும். (நியமிக்கப்பட்டவர்கள்/பயனாளிகள் தகுதி பெறுவார்கள்).<br>- ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு அமைய, கைவிடப்பட்ட முதலீடுகள் பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும். |

## 7. முக்கிய தகவல்கள் ஆவணம் - பிரிமியர் சேமிப்புகள்

| | |
|---|---|
| நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | - பிரிமியர் சேமிப்புக் கணக்குகளுக்கு அடுக்கு வட்டி வீதங்கள் ஏற்புடையதாகும் என்பதுடன், வட்டியானது தினசரி மீதியின் பேரில் கணிக்கப்படும்.<br>- நாளாந்த அடிப்படையில் சேரும் வட்டி மாத முடிவில் மூலதனமாக்கப்படும்.<br>- VISA இயலுமை கொண்ட பற்று அட்டைகள் வழங்கப்படும்.<br>- பற்று அட்டை வைத்திருப்பவர்கள் விற்பனை ஸ்தான (POS) கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியும்.<br>- உள்நாட்டில் Lanka Pay இயலுமை கொண்ட எந்தவொரு ATM இயந்திரத்திலும் சர்வதேச ரீதியாக VISA இயலுமை கொண்ட ATM இயந்திரங்களிலும் ATM மீளப்பெறுதல்களைச் செய்யலாம்.<br>- எந்த நேரத்திலும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வசதியளிக்கும் LB e-connect வசதி இலவசமாக வழங்கப்படும்.<br>- உள்நாட்டு நிலையான கட்டளைகள் மற்றும் நேரடிப் பற்று வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.<br>- SLIPS/CEFTS பரிமாற்ற வசதிகள் கிடைக்கும்.<br>- டிஜிட்டல் சேமிப்புக் கணக்கு என்ற வகையில் ஒன்லைன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு LB CIM வொலட் இடமளிக்கும். |
| தேவையான குறைந்தபட்ச மீதி | ரூ.10,000/- |
| ஆரம்பக் கட்டணம், இருப்பின் | ஆரம்பக் கட்டணம் இல்லை |
| பேணுதல் கட்டணம் | - CEFTS மற்றும் SLIPS கட்டணங்கள்<br>- ATM மீளப்பெறுதல்களுக்கு ஒரு கொடுக்கல் வாங்கல் கட்டணம் பிரயோகிக்கப்படும். |
| வைப்புக் காப்புறுதித் தொகை | வைப்புத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடியதாக ரூ.1,100,000 வரை. |
| வாடிக்கையாளர் மூலம் கணக்கு ஆரம்பிக்கப்படுதல்/ மூடப்படுதல் / பணப் பரிமாற்றம் செய்யப்படுதல் தொடர்பான வரையறைகள் | - 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் (பராயமடையாதவர்கள்) பிரிமியர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.<br>- செல்லுபடியாகும் தே.அ.அ./க.சீ. இல்லாதவர்கள் இக் கணக்கை ஆரம்பிக்க முடியாது. .<br>- இலங்கையில் வதிவிட வீசாவைக் கொண்டிருக்காத வெளிநாட்டவர்கள் இக் கணக்கை ஆரம்பிக்க முடியாது.<br>- வாடிக்கையாளரின் வேண்டுதலுக்கேற்ப பிரத்தியேகமாக அனுமதிக்கப்படக்கூடிய பணப் பரிமாற்றங்களுக்காக நிறுவனத்தினால் வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. |
| உறக்க நிலையிலுள்ள கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும் | - ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கொடுக்கல் வாங்கல் எதுவும் இடம்பெறாத சேமிப்புக் கணக்குகள் உறக்கநிலைக் கணக்குகளாக வகைப்படுத்தப்படும்.<br>- உறக்க நிலையிலுள்ள கணக்கை மீண்டும் செயற்படுத்துவதற்கு, முறைப்படி நிரப்பப்பட்ட உறக்கநிலைக் கணக்கைச் செயற்படுத்தும் படிவமும் ஆளடையாள ஊர்ஜிதப்படுத்தலும் அவசியம். |